(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 217.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2017 நவம்பர் 20 திங்கட்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

112/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தம்புத்தேகம வைத்தியசாலையின் சிகிச்சைக்கூடக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கையளிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அக்கட்டடத்திற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரரின் பெயர் யாதென்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு மொத்தப் பணத்தொகையும் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், செலுத்தப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒப்பந்ததாரரின் ஏதேனும் பணத்தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கட்டடத்தின் சுவர்களில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இதனால் நோயாளிகளினதும் வைத்தியசாலையின் பணியாளர்களினதும் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இற்றைவரை இக்கட்டடம் திருத்தப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்படி கட்டடத்தைத் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

(iii) மேற்படி திருத்தப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரின் பெயர் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

2.

1153/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹோமாகம மற்றும் பண்டாரகம ஆகிய இரண்டு பிரதேச சபை ஆளுகைப் பிரதேசங்களுக்கும் சொந்தமான 98 ஏக்கர் பரப்பளவு கொண்ட பதுவில வத்த காணியில் சுற்றுலாத்துறை வீடமைப்புக் கருத்திட்டமொன்றை செயற்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இக்கருத்திட்டத்தை செயற்படுத்தும் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி யாது;

(iii) இவ்வீடமைப்புக் கருத்திட்டம் காரணமாக இப்பிரதேசத்தில் பலத்த சுற்றாடல் பாதிப்பு ஏற்படுகின்றதென்பதை அறிவாரா;

(iv) இவ்வீடமைப்புக் கருத்திட்டத்துக்கு இலங்கை முதலீட்டு சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா;

(v) இக்கருத்திட்டத்துக்கு சுற்றாடல் ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1176/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், வரையறுக்கப்பட்ட லங்கா வைத்தியசாலையின் பங்கு உரிமையாளர் ஒருவராக திரு. கோட்டாபய ராஜபக்ஷ செயற்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இக்காலப்பகுதியில் வரையறுக்கப்பட்ட லங்கா வைத்தியசாலையின் தலைவராக இவர் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் எவ்வளவென்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், வரையறுக்கப்பட்ட லங்கா வைத்தியசாலை ஈட்டிய வருடாந்த இலாபம் ஒவ்வொரு ஆண்டு அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1199/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 1983 ஆண்டளவில் கிளிநொச்சி மாவட்டத்தினுள் காணப்பட்ட,

(i) நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை;

(ii) சிறு குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் எண்ணிக்கை;

(iii) அவற்றின் மூலம் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் அளவு;

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1983 முதல் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரை நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் புனரமைப்புக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1416/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 199 ஆம் இலக்க முன்மொழிவுக்கமைவாக செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கு முன்மொழியப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஏற்புடையதாக அமைகின்ற வகையில் அறிமுகம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற செலாவணி முகாமைத்துவச் சட்டத்தில் உள்ளடங்குகின்ற பிராதானமான மாற்றங்கள் யாவையென்பதையும்;

(iii) செலாவணி முகாமைத்துவச் சட்டத்தின் மூலம் இலங்கையின் சென்மதி நிலுவையில் மூலதனக் கணக்கினைத் திறப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) சார்க் வலயம் உள்ளிட்ட தெற்காசிய நாடுகளில் சென்மதி நிலுவையில் மூலதனக் கணக்கினைத் திறந்துள்ள நாடுகள் யாவையென்பதையும், அந்நாடுகளில் ஏற்பட்ட வெளிநாட்டு நிதிப் பாய்ச்சல் போக்குகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

6.

1540/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உமா ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் காரணமாக நீர் மூலங்கள் வற்றியமையால் உடபேருவ, அராவத்த, மக்குல் எல்ல, எகொடகம உள்ளிட்ட பதுளை மாவட்ட மக்கள் பாரிய பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அறிவாரா;

(ii) மேற்படி மக்களுக்கு குடிநீர் மற்றும் ஏனைய நீர் வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1595/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் தற்சமயம் இயங்கிவரும் உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்தின் ஊடாக சேவை வழங்கப்படும் மக்களின் எண்ணிக்கை, காணிப் பரப்பளவு மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iv) மக்களுக்கு கூடுதலான வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்காக புத்தளம் மாவட்டத்தில் புதிதாக நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) இவ்வாறு முன்மொழியப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களை விரைவாக நிறுவுவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1615/ '17

கௌரவ ஹேஷான் வித்தானகே,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில், எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் எரி எண்ணெய் சார்ந்ததாக மின்சாரம் உற்பத்தி செய்யும் மின்உற்பத்தி நிலையமொன்று உள்ளது என்பதையும்;

(ii) இந்த மின்உற்பத்தி நிலையத்தின் மூலம் பலத்த சுற்றாடல் சேதம் ஏற்படுகின்றது என்பதையும்;

(iii) இந்த மின்உற்பத்தி நிலையத்துக்கான சுற்றாடல் உரிமப்பத்திரம் உரிய முறையில் வழங்கப்படுவதில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இந்த மின்உற்பத்தி நிலையம் உரித்தாயுள்ள கம்பனி யாது;

(ii) இக்கம்பனியுடன் உடன்படிக்கை செய்துகொண்டுள்ள கால எல்லை யாது;

(iii) மேற்படி சுற்றாடல் சேதத்தைக் குறைத்து பிரதேச மக்கள் வாழ்கைக்கு நிவாரணமளிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்று உள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சிநிரல் மீதான பாராளுமன்றத்தின் தெரிகுழு,— 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்பட்ட நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சிநிரல் மீதான பாராளுமன்றத்தின் தெரிகுழுவிற்கு தன்னால் அவதானிக்கப்பட்ட விடயங்களை, 2016 ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி பாரளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் இடைக்கால அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இறுதி அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு குறிப்பிட்ட தெரிகுழுவிற்கு வழங்கப்பட்டுள்ள கால எல்லை, 96 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், 2018 நவம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை காலநீடிப்புச் செய்யப்படுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு எதிர்வரும் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு வாய்ப்பளித்தல் மற்றும் அவற்றின் இடைநேர்விளைவான விடயங்களை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற தெரிகுழு,— 2016 நவம்பர் மாதம் 17 ஆம் திகதி கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்பட்ட வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு எதிர்வரும் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு வாய்ப்பளித்தல் மற்றும் அவற்றின் இடைநேர்விளைவான விடயங்களை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு தன்னால் அவதானிக்கப்பட்ட விடயங்களை, 2016 ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இயலாதுள்ளதால் குறிப்பிட்ட தெரிகுழுவிற்கு வழங்கப்பட்டுள்ள கால எல்லை, 96 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், 2018 மே மாதம் 20 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2018) — (ஒதுக்கப்பட்ட ஒன்பதாம் நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, நவம்பர் 18).

* 2.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய குறித்த சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் விசேட இறக்குமதி அனுமதிப்பத்திரக் கட்டணம் தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 ஒற்றோபர் 02 ஆம் திகதிய 2039/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலங்கை மகாவலி அதிகாரசபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் - 2012,— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ் 2016.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2012.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை மகாவலி அதிகாரசபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.03.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*4.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலங்கை மகாவலி அதிகாரசபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் - 2013,— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ் 2016.11.15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை மகாவலி அதிகாரசபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.03.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*5.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அரச மரக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் - 2013,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான அரச மரக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(வலுவாதார அபிவிருத்தி, சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.03.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 6.

விளையாட்டுத்துறை அமைச்சர்,— சுகததாச தேசிய விளையாட்டுப் பல்தொகுதி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்கறிக்கை-2012,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)சீ உட்பிரிவின் கீழ் 2016.06.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2012.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான சுகததாச தேசிய விளையாட்டுப் பல்தொகுதி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(இளைஞர், விளையாட்டுத்துறை, கலை மற்றும் மரபுரிமைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 7.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்,— காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் - 2013,— 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணி சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் 2016.11.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.03.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 8.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்,— காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் - 2014,— 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணி சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் 2016.11.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.03.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 9.

அபிவிருத்திப் பணிப்பொறுப்புகள் அமைச்சரும் வெளிவிவகார அமைச்சரும்,— ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் - 2014,— 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் 2016.11.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.02.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 10.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் - 2013,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(C) பிரிவின் கீழ் 2016.09.06 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.01.26 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 11.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் - 2012,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(C) பிரிவின் கீழ் 2017.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2012.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.03.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 12.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் - 2014,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(C) பிரிவின் கீழ் 2017.05.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.26 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் - 2014,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(C) பிரிவின் கீழ் 2016.12.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.08.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 14.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் - 2013,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(C) பிரிவின் கீழ் 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.08.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*15.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்,— தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்-2013,— 1996 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(உ) பிரிவின் கீழ் 2016.06.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(பெண்கள் பால்நிலை பற்றிய மேற்பார்வைக் குழுவினால் 2017.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*16.

வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரும் நீதி அமைச்சரும்,— இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் - 2013,— 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ், 2016.06.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2016.10.05 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 17.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 126 மற்றும் 321 ஆம் பிரிவுகளின் கீழ், கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல் காத்தலில் ஈடுபடல் நியமங்கள் தொடர்பாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மே 08 ஆம் திகதிய 2018/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் திருத்தப்பட்ட 2016 ஒக்டோபர் 04 ஆம் திகதிய1987/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.10.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்,— கப்பற்றொழில் முகவர்களுக்கு, கப்பற்சரக்கனுப்புனருக்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுனருக்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துனருக்கு உரிமமளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, கப்பற்சரக்கனுப்புனருக்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுனருக்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துனருக்கு உரிமமளித்தல் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ், 2017 ஆம் ஆண்டின் கப்பற்றொழில் முகவர்கள், கப்பற்சரக்கனுப்புனர்கள், கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுனர் மற்றும் கொள்கலன் செயற்படுத்துனர் (கட்டணங்களின் அமைப்பு முறை) ஒழுங்குவிதிகள் தொடர்பாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 ஒற்றோபர் 17 ஆம் திகதிய 2041/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2012/2013,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2016.01.28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2013.03.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.08.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 20.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2013/2014,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2014.03.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.08.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 21.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்,— இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்-2012,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2015.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2012.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.01.26 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 22.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்,— இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்-2013,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2016.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை துறைமுக அதிகார சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.01.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 23.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்,— இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்-2014,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2016.11.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை துறைமுக அதிகார சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.01.26 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*24.

கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்,— ஸ்ரீலங்கா ஸ்டேட் டிரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிடெட்டின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் - 2012/2013,— 1970 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க ஸ்ரீ லங்கா ஸ்டேட் டிரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிடெட் சட்டத்தின் கீழ் 2016.07.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2013.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, சுயாதீன கணக்காய்வாளர்களின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஸ்ரீலங்கா ஸ்டேட் டிரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிடெட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2016.10.04 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*25.

கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்,— ஸ்ரீலங்கா ஸ்டேட் டிரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிடெட்டின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்- 2013/2014,— 1970 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க ஸ்ரீ லங்கா ஸ்டேட் டிரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிடெட்ட சட்டத்தின் கீழ் 2017.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2014.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, சுயாதீன கணக்காய்வாளர்களின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஸ்ரீலங்கா ஸ்டேட் டிரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிடெட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.04.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 26.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் - 2011,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2016.12.10 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2011.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் ஒருங்கிணைந்த நிதிநிலைக் கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கை ஆகியன அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 27.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— தேசிய சேமிப்பு வங்கியின் ஆண்டறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் - 2015,— நிதிச் சட்டத்தின் 35(3) ஆம் உட்பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) ஆம் உட்பிரிவின் கீழ், 2017.01.24 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய சேமிப்பு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 28.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் - 2015,— நிதிச்சட்டத்தின் 35(3) உட்பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) உட்பிரிவின் கீழ் 2017.01.25 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்டதும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 29.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— மக்கள் வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் - 2015,— நிதிச் சட்டத்தின் 35(3) உட்பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) உட்பிரிவின் கீழ் 2017.03.08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான மக்கள் வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 30.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் - 2014,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) உட்பிரிவின் கீழ் 2017.03.21 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட சுயாதீன பட்டயக் கணக்காளர்களின் கருத்துக்கள் உள்ளடக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 31.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் - 2014,— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கமைய 2017.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, பட்டயக் கணக்காளர்களான கேபீஎம்ஜீ நிறுவனத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

